## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# " நானே
# வழியும்
# சத்தியமும்
# ஜீவனுமாயிருக்கிறேன் "

யோவான் – 14:6

செய்தி மலர்
2024
செப்டம்பர்

இதழ் : 17
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, கடந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் நம்மை நடத்தின தேவன் வரும் செப்டம்பர் மாதத்திலும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவார்.

பரிசுத்த பேதுரு கூறினார் "ஆண்டவரே யாரிடத்தில் போவோம்? நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்" என்று (யோவா-6:68,69) ஆம் பிரியமானவர்களே, ஜீவ வசனத்தை விட்டு நம்மால் பிரிந்து போகவே முடியாது. எப்படியெல்லாம் வசனங்கள் கிரியை செய்கிறது என்று கீழ்வரும் பகுதிகளில் தெளிவாக காணலாம்.

### 1.இயேசு......

மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (லூக்-4:4) என்று இயேசு குறிப்பிடுகிறார். ஆம் பிரியமானவர்களே, வேத வசனங்களை வாசிக்க வாசிக்க அது நம்முடைய ஆத்துமாவை பிழைப்பூட்டுகிறது. அது நமக்கு நித்திய ஜீவன் என்று இயேசு கூறினார். (யோவா-12:50) நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்று இயேசு கூறினார் (யோவா-14:6).

அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலைப் போலிருந்தன. அவருடைய சிரசின் மேல் அநேகக் கிரீடங்கள் இருந்தன. அவருக்கே அன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. (வெளி-19:12,13). ஆம் பிரியமானவர்களே, நம் தேவன்தான் வார்த்தையாக இருக்கிறார். அதனால்தான் வேத வசனங்களை வாசிக்கின்றபொழுது ஒரு ஜீவன் நமக்குள் இறங்கி வருகிறது. வேத வசனங்கள் நமக்கு ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. தியானத்தோடு அவைகளை வாசிக்கும்பொழுது நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் தொடப்படுகிறது. நாமும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

## 2. எரேமியா...

ஒருமுறை எரேமியா அவர் சொன்ன தீர்க்கதரிசனங்களுக்காக இஸ்ரவேல் ஜனங்களால் அதிகம் கொடுமைப்படுத்தப்பட்டார். அவர் சொன்னா "நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன். கொடுமையென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக்கூறுகிறேன். நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமும் ஆயிற்று. ஆதலால் நான் அவரை பிரஸ்தாபம் பண்ணாமலும் இனி கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன். ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைப்பட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்திலிருந்தது. அதை சகித்து இளைத்துப்போனேன். எனக்கு பொறுக்கக்கூடாமல் போயிற்று. (எரேமி-20:8,9)

ஆம் பிரியமானவர்களே, எத்தனைதான் எதிர்ப்புகள், அடக்குமுறைகள், போராட்டங்கள், அவமானங்கள் சூழ்ந்த போதும் எரேமியாவால் வேத வார்த்தைகளை அடக்கிப்போட முடியவில்லை. கர்த்தருடைய வார்த்தைகள் எலும்புகளில் அடைப்பட்டு எரிகிற அக்கினியைப் போல அவருடைய இருதயத்திலிருந்தது. அவர் மேலும் சொன்னார் உம்முடைய

வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே உம்முடைய நாமம் எனக்கு தரிக்கப்பட்டிருக்கிறது. (எரேமி-15:16) தேவனுடைய நாமம் என்ன? அது கர்த்தருடைய வாாத்தையே. ஆம் பிரியமானவர்களே எவ்வளவுதான் போராட்டங்கள் நம் வாழ்க்கையில் வந்தாலும் வசனங்களை விட்டு நம்மால் பிரிந்து போக முடியாது. அவைகள் நம் இருதயத்திற்குள் பேசிக்கொண்டேயிருக்கும்.

## 3. தாவீது...

தாவீது சொன்னான் " கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாங்கள் செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாங்கள் உண்மையும் அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்படத்தக்கதும் தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளை கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுன்டு" (சங்கீ-19:7-11) ஆம் பிரியமானவர்களே, வேத வசனங்கள் தவறுகள் செய்யாதபடிக்கு நம்மை எச்சரிக்கிறது.

நான் வலது புறமாய் சாயும்போதும், இடதுபுறமாய் சாயும்போதும் வழி இதுவே இதில் நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசாயா-30:21) கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து

**இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத்தந்து இலையுதிராயிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீ-1:3,4)**

**பிரியமானவர்களே, வேத வசனங்கள் இல்லாமல் நம்மால் வாழமுடியாது. நம் இருதயத்தில் அது பேசிக்கொண்டேயிருக்கும். அது நமக்கு ஆவியாயும் ஜீவனாயும் இருக்கும். நல் ஆலோசனைகளைத் தரும். நாம் செய்கிற காரியங்களை வாய்க்கச் செய்யும். ஆகவே வேத வசனங்களை பற்றிக்கொள்வோம். நித்திய ஜீவனை சுதந்தரித்து சந்தோஷமாக வாழ்வோம்.**

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து வரும் செப்டெம்பர் மாதம் முழுவதும் வழி நடத்துவாராக.**

**கர்த்தரின் பணியில்,**
**உங்கள் அன்பு சகோதரன்**
**S.ஸ்டாலின்...**

## தேவ செய்தி

### அடைக்கப்பட்ட கதவுகள் (closed Doors)

**வெளி-3:20 இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில், நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.**

**மேலே சொல்லப்பட்ட வசனம் இரட்சிக்கப்படாதவர்களுக்கு என்று அநேகர் நினைப்பதுண்டு. ஆனால் உண்மையில் இந்த வசனம் லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்டிருக்கிறது. சபையில் உள்ள கிறிஸ்தவர்களுக்குத்தான் எழுதப்பட்டது. காரணம் என்ன? திருச்சபை**

ஆண்டவராகிய இயேசுவை வெளியே தள்ளிவிட்டு கதவைச் சாத்தி விட்டது. திருச்சபையில் இயேசுவுக்கு இடமில்லை. என்ன பரிதாபம். வீட்டைக்கட்டினவருக்கே வீட்டில் இடமில்லை. இன்று அநேக குடும்பங்களில் இதே நிலைமை தான். வயதான பெற்றோரை அநாதை விடுதி, முதியோர் இல்லங்களில் விட்டு விடுகிறார்கள். வேறு யாரும் அல்ல. சொந்தப்பிள்ளைகளே அவர்களை விரட்டி விடுகிறார்கள். எப்போதாவது முதியோர் இல்லத்தில் போய் அவர்களை பார்த்து வருவார்கள். பிள்ளைகளைப் பார்த்தவுடன் முதிர்ந்த பெற்றோர் கண்களில் கண்ணீர்தான் வரும். உன்னை எப்படி தாலாட்டி சீராட்டி வளர்த்தேன், எங்களைவீட்டை விட்டு விரட்டி விட்டாயே. வீட்டில் எங்களுக்கு ஒரு இடம் கொடுக்க மாட்டாயா? பெற்றோரின் கண்ணீர்தான் கதவைத் தட்டும் சத்தம்.

ஆண்டவராகிய இயேசு கண்ணீரோடு வாசற்படியில் நின்று தட்டுகிறார். இயேசுவை தெருவிலே நிற்கவைத்து வேடிக்கைப் பார்க்கும் கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது? நிதானித்துப் பார்ப்போம். 1 அடைக்கப்பட்ட கதவுகள் நம்முடைய வாழ்க்கையில் இருக்கிறதா? மூன்று விதமான அடைக்கப்பட்ட கதவுகளைக்குறித்து நாம் தியானிப்போம்.

## 1. அவிசுவாசம் என்னும் கதவு (Door of Unbelieving)

அவிசுவாசம் என்பது ஒரு ஆறிப்போன காபி. சூடான காபி நன்றாக இருக்கும் அநேகர் விரும்பிக்குடிப்பார்கள். இப்பொழுதெல்லாம் உழடன உழகசுநந (குளிர்ந்த காபி) வந்து விட்டது. இதை வாலிபர்கள் விரும்பிக்குடிக்கிறார்கள். ஆனால் ஆறிப்போன வெதுவெதுப்பான காபியை யாரும் விரும்புவதில்லை. அநேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கை வெதுவெதுப்பில் ஆறிப்போன காபியைப் போல் ஆகிவிட்டது. காரணம்– அவிசுவாசம். இயேசுவைப் பார்த்து நடந்தவர்கள், சூழ்நிலைகளை, உலகத்தைப் பார்க்கத் துவங்கியபோது, விசுவாசம் பறந்து போனது. வார்த்தையை நம்பினவர்கள், இன்று வருமானத்தைப் பார்க்க துவங்கி விட்டார்கள். காரணம் சூழ்நிலைகள் அவர்கள் விசுவாசத்தை பறித்துக்கொண்டது.

எம்மாவுக்கு போகும் சீஷர்கள், அவிசுவாசத்தோடு நடக்கிறார்கள். சீஷர்களாய் இருந்தவர்கள் அவிசுவாசிகளாய் மாறிப்போனார்கள். தேவனுடைய வீட்டை விட்டு (எருசலேம்) விலகிப்போகிறார்கள். இயேசுவை வெளியே வீதிக்குத் தள்ளிவிட்டார்கள். ஆனாலும் இயேசு அவர்களைத் தேடி வந்தார். வீதியிலேயே அவர்களை சந்திக்கிறார். வசனங்களைக் கொண்டு

அனல் மூட்டுகிறார். உணர்த்தப்பட்ட சீஷர்கள். இயேசுவுக்கு வீட்டின் கதவைத் திறந்துக் கொடுத்தார்கள். உள்ளே போஜன வேளையில், இயேசு அவர்களுடைய அவிசுவாசக் கண்களைத் திறந்தார். நாம் கூட வேத வசனங்களை வாசித்து தியானித்து, அவிசுவாசத்தை மேற்கொள்வோம். விசுவாசத்தில் வளர்வோம்.

## 2. சுயநீதி என்னும் கதவு (Door of self Righteousness)

என்னுடைய பரிசுத்தம், என் ஞானம் பெலன் எனக்குப் போதும், தேவ ஒத்தாசை தேவையில்லை, என் சுய பெருமை,தாலந்து என்னைப் பரலோகம் கொண்டு போய் சேர்க்கும் என மணற்கோட்டை கட்டுவோர் அநேகர் இருக்கிறார்கள். என்னிடத்தில் ஒரு குறையும் இல்லை என்று லவோதிக்கேயா திருச்சபையைப் போல மார் தட்டிக் கொள்ளுகிறார்கள. ஆயக்காரனை மட்டம் தட்டின பரிசேயனும் தன்னை அப்படித்தான் உயர்த்திக்கொண்டான், ஐயோ, பரிதாபம். இவையெல்லாம் செல்லாக் காசு என்று அறியாமல் இருக்கிறார்கள். எனவே தான் இப்படியாய் பக்தன் ஒரு பாடலைப் பாடுகிறான்.

"என் ஞானம் கல்வி செல்வங்கள் எல்லாம்
ஒன்றுமில்லை குப்பையென்றெண்ணுகிறேன்
என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே"– அனுதினமும்...

பவுல் என்ற பரிசேயன், தன் சுயநீதியை நம்பி வாழ்ந்து வந்தான். அவன் இருயத்தில் இயேசுவுக்கு இடமில்லை. காரணம் சுயநீதி என்னும் கதவு அவன் வாழ்வில் தடையாய் இருந்தது. ஆனால் இயேசு தமஸ்குவுக்குப் போகும் வீதியிலே பவுலை சந்திக்கிறார். நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து நானே என்று வெளிப்படுத்தினார்.இயேசுவுக்கு இதயத்தில் இடம் கொடுத்தான். சுயநீதி என்னும் கதவை சுக்கு நூறாய் உடைத்துப் போட்டான். "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி–3:11) மனந்திரும்பின பவுலின் வார்த்தைகள் இது. என்னிடத்தில் குறை எதுவுமில்லை, நான் ஒரு பாசுத்தவான் என்று சுயநீதியைக்குறித்து பெருமை பாராட்டுகிறோமா? தேவனுடைய சமூகத்தில் நம்மைத் தாழ்த்துவோம். தற்பரிசோதனை செய்து கொள்வோம் தேவ நீதியை சார்ந்து வாழ்வோம்.

## 3. கீழ்ப்படியாமை என்னும் கதவு (Door of Disobedience)

" என் சத்தத்தைக் கேட்டு கதவைத்திற" கீழ்படிதலை ஆண்டவர் விரும்புகிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளை ஆண்டவராகிய தேவன் விரட்டி விட்டார் என்று சொல்வார்கள். ஆனால் அதற்கு முன்பதாகவே ஆதாமும், ஏவாளும் விரட்டி விட்டார்கள். அவருடைய வார்த்தையை அறிந்திருந்தார்கள். மறக்கவில்லை. ஆனால் பிசாசு சோதித்த போது பிசாசின் சத்தத்திற்குக் கீழ்படிந்தார்கள். தேவ சத்தத்தை உதாசீனப்படுத்தினார்கள். தேவசாயலை இழந்தார்கள். தேவ மகிமையை இழந்து நிர்வாணிகளானார்கள். பரிசுத்தத்தை இழந்தார்கள். பாவ இருள் கண்களை குருடாக்கினது. ஒளிந்து கொண்டார்கள். ஆனால், அன்பான தேவன் அவர்களைத் தேடி வந்தார். ஒரு வஸ்திரத்தை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆண்டவராகிய இயேசு. பூமியிலே வந்து நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடே எழுந்தார். அவருக்கு நம்முடைய வாழ்க்கையில் இடங்கொடுப்போம் மூடப்பட்ட கதவுகள் இருந்தால், அதை தகர்த்தெறிவோம். மரியாள் நல்ல பங்கை தெரிந்துகொண்டாள். மார்த்தாளோ, அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டாள். மூடப்பட்ட கதவுகள் மார்த்தாளிடம் இருந்தது. நாம் எப்படி? சிந்திப்போம், செயல்படுவோம், தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்
**கிறிஸ்டோபர் தேவராஜ்...**



## வாலிபர் பகுதி

### பிரியமானவன்

மத்-17:5-2 அவர் பேசுகையில் இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டு இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். என்று பரிசுத்த ஆவியானவர் மூலம் பிதா தன் குமாரன் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறார்.

நாமும் பிரியமான பிள்ளைகளாக சாட்சியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் வாழ தேவன் பிரியப்படுகிறார். தானி-9:23-ல் நீ மிகவும் பிரியமானவன் என்று தானியேலைப் பார்த்து அவருடைய தூதனை வைத்து பேசுகிறார்.

நம்மை பார்த்துப் பிரியமானவனே, எனக்கு பிரியமான பிள்ளையாக வாழ வேண்டும் என்பதே அவருடைய ஆசை என்று தெளிவுபடுத்துகிறார்.

## 1. யார் மேல் பிரியமாயிருக்கிறார் ?

கர்த்தரை குறித்து மேன்மை பாராட்டுகிறவன் எரேமி–9:24 மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதை குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே செல்வத்தையும் கதவிகளையும் ஆளுமைகளையும் குறித்து மேன்மை பாராட்டுவானாகில் அவன் விழுந்து விடுவான். மேட்டிமை பெருமை என்ற எண்ணங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தை பிரியமான வாழ்க்கை வாழ விடாமல் பரலோக ஜீவியத்தை இழந்து விட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். எனவே தேவன் தந்த நல்ல ஜீவியத்தில் தேவனுடைய கிருபையும் நியாயத்தையும் நீதியையும் குறித்து மட்டுமே மேன்மை பாராட்டுகிறவன் தேவனுக்கு பிரியமானவன் என்று வேதம் கற்றுத்தருகிறது.

## 2. வேதத்தில் பிரியமாயிருக்கிறவன்...

சங்கீ–1:2–ல் வாசிக்கும் போது கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவு பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். இன்றைய சூழ்நிலையில் உலக அளவில் புள்ளி விவரம் கூறுகிறது. அநேக நபர்கள் தங்களது நேரத்தை சமூக வலைதலத்தில் தான் செலவு செய்கிறார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் தேவனில் அன்பு கூறுகிறவர்கள் எப்போதும் வேதத்தில் தியானமாயிருப்பார்கள். உம்முடைய வேதம் என் மன மகிழ்ச்சியாய் இராதிருந்தால் நான் துக்கத்தில் அமிழ்ந்து போயிருப்பேன் என்று தாவீது கூறுகிறார்.

நாம் சோர்ந்து போகிற சூழ்நிலையில், நம்மை சுற்றி எல்லாமே அசாதரனமாக இருந்தாலும் தேவனுடைய வார்த்தைகள் எப்போதும் நம்மை தேற்றுகிறதாகவே உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் எத்தனை முறை தேவ வார்த்தைகள் நம்மை தேற்றி வாக்கு தத்தத்தை நிறைவேற்றி இருக்கிறார் என்று சிந்தித்து அவருக்கு நன்றி கூறுவோம்.

நம்மை பார்த்து என் பிரியமே நீ ரூபவதி என்று கூறும் போது நம் உள்ளத்தில் எத்தனை ஆனந்தம் ஆகவே அவருக்கு பிரியமான வழியில் நடந்து பரலோக ராஜ்ஜியத்திற்கு சொந்த பிள்ளைகளாவோம்.

வாலிபம் இயேசுவுக்கே...

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி -12:2 )

செல்வன்.ஆண்டனி கமலதாசன்
சகோ. கிதியோன் செங்குட்டுவன்
செல்வி.மோனிகா ஷெர்லின் பால் சேகரன்
செல்வி.லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வன்.சிராஜ் ஜேடன் சாலமோன் முருகன்
சகோதரி.ஐரின் நிஷா கிரண்குமார்
செல்வன்.அமீஷ் டேவிட் ஜெயக்குமார்
சகோதரி.இவாஞ்சிலின் ராஜா கிறிஸ்டி சகாய டார்வின்
செல்வன்.ஞானசிகாமணி ஆசீர்வாதம்
சகோ.ஷர்மன் ராஜ்
சகோ.சு.ஜெகநாதன்
செல்வி.டெலிஷா காட்லின் ஸ்டீபன் ஜெயக்குமார்
சகோதரி.செலின் டேவிட் ஜெயக்குமார்
சகோதரி.ஷீலா இன்பராணி பக்தராஜ்
சகோதரி.சுபா ஸ்டீபன்
செல்வன் சந்தோஷ் ஜெயக்குமார்
ரவி ஜான் பீட்டர்
செல்வன் மிதுன்ராஜ் சத்தீஷ் எத்திராஜ்
சகோ.மணிராஜ்

சகோதரி.அறிவழகி கலியமூர்த்தி
சகோதரி.அமுதா சுகுமாரன்
செல்வி.பெர்டினா சுனில்
செல்வன்.பிரேயன் சத்தீஷ்
சகோதரி.தீபா ராஜன்
சகோ.விக்டர் செங்குட்டுவன்
சகோதரி.தெபோராள் ஹனி மெர்சி
செல்வன்.டோவின் ஜோசப் திவ்யராஜ்
சகோதரி.அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி.ரீனா வேளாங்கன்னி
சகோதரி.பிரதீபா ஷெரினா வினோத்
செல்வன்.ஆரோன் டேனியேல் மணிராஜ்
சகோதரி.பிளஸ்ஸி பியூலா வில்சன்
சகோ.தினேஷ்குமார்
செல்வி.ஜேரல் ஜெனிகா ஜெய் சாம் டேனியேல்
செல்வி.ரின்சி வேளாங்கன்னி
செல்வன்.கெவின் ஆஷ்ரே ஆரோக்கியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி. திரு. வில்சன் செல்லையன் / குமுதினி
திருமதி. திரு. ரவி ஜான் பீட்டர் / பாக்யா
திருமதி. திரு. மார்க் ஆண்டனி / மாஸ்கெரெனஸ்

# 2024 – செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/09/2024 | சகோ.ஜான் போஸ்கோ | சகோ. ஸ்டாலின் |
| 08/09/2024 | சகோ. சுபின் சிங் | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 15/09/2024 | சகோ. சாம் ஆனந்த் | சகோ. ஆரோக்கிய தாஸ் |
| 22/09/2024 | சகோ. பக்த ராஜ் | சகோ. கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 29/09/2024 | சகோ. சிவக்குமார் | சகோ.சுகுமார் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/09/2024 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. ஸ்டாலின் |
| 13/09/2024 | சகோ. டேவிட் | சகோ. M.கிறிஸ்டோபர் |
| 20/09/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை (பாஸ்டர். S.மனோவா Finger Of God Chruch.Vellore) | |
| 27/09/2024 | சகோ. பிராங்ளின் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**8/9/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பின்னர் அறிவிக்குப்படும்
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**27/9/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – தானியேல்

**28/9/2024 சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – மத்தேயு

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் – மாலை 7:00 முதல் 8:30 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – எபினேசர் வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. புளித்த மாவு எது? புளிப்பில்லாத அப்பம் எது?
2. "நீங்களே முத்திரை" எதற்கு?
3. அதிக............ வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்.
4. உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின்.........
5. ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ............ இல்லை
6. அப்பத்தை பிட்டார் இயேசு "அப்பம்" எது?
7. ஒருவன் தேவனுடைய ஆலயத்தை......... அவனை தேவன்............
8. பவுல் விதைத்த விதை எது?
9. ஞான பானம் தரும் ஞானக் கன்மலை யார்?
10. அணிவோம் அணிவோம் அனைவரும் அணிவோம், அழிந்திடும் சாயல் அறவே அகற்றி, அக்களிப்போடு அதனையும் அணிவோம் எதனை?
11. பக்தி விருத்தி காரணி எது?
12. தேவன் கலகத்திற்கு தேவனாய் இராமல் ............ தேவனாய் இருக்கிறார்.

3. உங்கள் காரியங்கள் ............ செய்யப்படட்டும்.

14. அக்கினியால் சுட்டெரிப்பினும்......... இல்லை எனில் நான் ஒன்றுமில்லை.
15. நாமும் கிறிஸ்துவை ......... பாராதிருப்போமாக.

**விடைகளை வருகின்ற 20-10-2024 க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்**

**" 1-கொரிந்தியர் "**

**அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

## 2024 – ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு விடை

1. ஏவில் மெரொதாஜ் (எரேமி–52:31)
2. சிதேக்கியா (எரேமி–52:11)
3. சிதேக்கியா (எரேமி–52:11)
4. கல்தேயா (எரேமி–50:10)
5. 4600 (எரேமி–52:30)
6. பாபிலோன் (எரேமி–51:7)
7. அசதியாய் (எரேமி–48:10)
8. யாக்கோபு (எரேமி–46:28)
9. பாருக் (எரேமி–45:3)
10. எகிப்தியன் (எரேமி–46:8)
11. மோவாப் (எரேமி–48:7)
12. நேபுசராதான் (எரேமி–39:10)
13. கெதலியா (எரேமி–40:9)
14. ஆசாரியர்களின் (எரேமி–31:14)
15. பத்து பேர் (எரேமி–41:8)

## 2024– ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்

SIS. பியூலா மெர்சி பால்

SIS. நித்யா ஜோன்ஸ்

SIS. தயா ஏசுரத்தினம்

SIS. வனிதா

SIS. மரிய குளோரி தாஸ்

SIS.ஜான்சி ராணி

SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்

SIS. சாந்தி

Bro. எபினேசர்

# சகோதரிகள் பகுதி

## ஜெபம்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்.

நமது ஆண்டவர் ஜெபத்தைக் கேட்பவர் மட்டுமல்ல ஜெபத்துக்கு பதிலளிக்கிறவரும் கூட. நீங்கள் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் மிக அதிகமாய் அன்புகூர்ந்து பலன் காண செய்பவர்.
"என்னை நோக்கிக் கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததும் பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமி–33:3)

ஜெபத்தை பொதுவாக நான்கு பகுதிகளாக பிரிக்கலாம்.

1. மனங்கசந்து அழுது ஜெபிக்கும் ஜெபம்
2. போராடி ஜெபிக்கும் ஜெபம்
3. இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிற ஜெபம்
4. ஸ்தோத்திர ஜெபம்

### 1. மனங்கசந்து அழுது ஜெபிக்கிற ஜெபம்...

மனங்கசந்து அழுது ஜெபிக்கிற ஜெபத்திற்கு அடையாளம் அன்னாள்தான். பிள்ளைகளில்லாத அன்னாளை அவருடைய சக்களத்தி நாள் தோறும் தனது வார்த்தைகளினால் அன்னாளை குத்தி வேதனைப்படுத்தி மலடி என்று பரியாசம் பண்ணி மனமடிவுண்டாக்கினாள். அந்த குத்துதல் அன்னாளை கர்த்தருடைய பாதத்துக்கு வந்து தன் இருதயத்தை ஊற்றிவிடும்படி எழுப்பினது. கர்த்தர் அவர் விண்ணப்பத்தை கேட்டு சாமுவேல் என்னும் தீர்க்கதரிசியை மகனாகத் தந்தார். அவன் ஜெப ஜீவியத்திற்கு அடையாளமாகக் காணப்பட்டாள். நமது வாழ்க்கையிலும் கூட கர்த்தர் எழுப்பிருக்கும் பெனின்னாக்களுக்காக தேவனை துதிப்போம். எத்தனை நிந்தனை அவமானம் துரோகங்கள் பரியாசங்களை நம்மேல் விதைத்தாலும் நமது ஜெபம் அவர்களை வெட்கப்படுத்தும். மட்டுமல்லாமல் அவர்கள் வார்த்தைகள் செயல்கள் நம் இருதயத்தை குத்தினாலும் "முள்ளுகளுக்குள்ளே லீலி புஷ்பம் எப்படியிருக்கிறதோ? அப்படியே குமாரத்திகளுக்குள்ளே என்கரு பிரியமானவரும் இருக்கிறார்." (உன்னத–2:2) என்று கர்த்தர் நம்மை பார்த்து கூறுவார்.

## 2. உபவாசத்தோடுள்ள வைராக்கியமான ஜெபம்...

அன்னாளின் புருஷன் எல்க்கானா அவளைப்பார்த்து அன்னாளே ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய் என்று கேட்டான். (1-சாமு-1:8) அன்னாள் தன் இருதயத்தை ஊற்றி உருக்கமாய் ஜெபித்தாள். அவளுடைய துக்கம், அழுகை, மனமடிவு, விசனம் அத்தனையும் வைராக்கியத்தோடு உபவாசமிருந்து ஜெபிக்கும்படி அவளை ஏவியது முதலாவது அவள் ஜெபத்திற்கு கர்த்தருடைய ஆலயத்தை நாடி ஓடினாள். மனக்கிலேசத்தோடு தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். நீண்ட நேரம் விண்ணப்பம் பண்ணினாள். (1-சாமு-1:10,15,16) கர்த்தர் ஜெபத்தைக்கேட்டார்.

எஸ்தர் ராஜாத்தியும் அவள் தாதிகளும் மூன்று நாட்கள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்து உபவாசம் பண்ணினார்கள். எஸ்தர் ராணி சட்டத்தை மீறி நான் செத்தாலும் சாகிறேன் என்று வைராக்கியமாக ராஜாவின் சந்நிதியில் பிரவேசித்தாள். (எஸ்-4:14) அந்த வல்லமையுள்ள ஜெபத்தினாலே தேசத்து சட்டங்கள் திருத்தப்பட்டன. அந்த உபவாச ஜெபத்தின் பலன், "என் குலத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்க கூடும்? (எஸ்த-8:6) என்ற அவளது விண்ணப்பம் ராஜாவின் இருதயத்தை நெகிழ செய்தது. "காரியம் மாறுதலாய் முடிந்தது. எத்தனை ஆமான்கள் எழும்பினாலும் கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. நமது உபவாசத்தின் ஜெபம் அவர்கள் வெட்டின குழியில் அவர்களே விழ வைத்து நம்மை பாதுகாக்க நம்மை கர்த்தர் இருக்கிறார். தேவ பிள்ளைகளே உங்களுடைய ஜெபம் வைராக்கியமுள்ள உபவாச ஜெபமாயிருக்கட்டும்.

## 3. இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிற ஜெபம்...

அன்னாள் இருதயத்தை ஊற்றி ஜெபித்ததை பிரதான ஆசாரியனாயிருந்த ஏலி கவனித்தார். "அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. ஆகையால் அவள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்துக்கொண்டார். (1-சாமு-1:13) அன்னாள் பிரதான ஆசாரியனைப் பார்த்து "என் ஆண்டவனே நான் மனக்கிலேசமுள்ள ஸ்தீரி. நான் திராட்சை ரசமாகிலும் மதுவாகிலும் குடிக்க வில்லை நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாள். (1-சாமு-1:15) அதற்கு ஏலி சமாதானத்தோடே போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக என்றான். (1-சாமு-1:17) இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிற ஜெபத்திற்கு நிச்சயமாகவே பதில் உண்டு. கர்த்தர் ஒரு போதும்உங்களுடைய கண்ணீரின் ஜெபத்தை புறக்கணித்து விட்டு கடந்து

செல்கிறவரல்ல. உங்கள் ஜெபத்துக்கு ஆம் என்றும் ஆமென் என்றும் பதில் தந்தருளுவார்.

எலியாவின் புலம்பல் புஸ்தகத்தில் பார்க்கும் போது ரூபவதியான செல்வமாகவும், செல்லமாகவும் வளர்ந்த சீயோன் குமாரத்தி பெருமையின் நிமித்தம் தேவகோபத்திற்கு ஆளானார். அவளுக்கு வந்த சஞ்சலம் சகிக்கமுடியாது. (ஏசா-3:16-24)அவளைக் குறித்து பார்க்கலாம். சீயோன் தன் கைகளை விரித்தாள். அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை. (புலம்-1:17) தன்னை சிநேகிப்பவர்களை கூப்பிட்டாள். அவர்களோ அவளை மோசம் போக்கினார்கள்.(புலம்-1:19) சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும், பகலும் நதியினளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணீன் கருவிழி சும்மாயிருக்கவொட்டாதே, எழுந்திரு ராத்திரியிலே முதல் ஜாமத்தில் கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீராலே ஊற்றி விடு (புலம்-2:18,19) என்று எரேமியா தீர்க்கதரிசி புலம்புகிறார். அவளது கதறல் தேவ சமூகத்தை எட்டியது. கர்ப்ப வேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல் விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும் சீயோன் குமாரத்தியின் சத்தம் கேட்டது. அவள் பெருமூச்சு விட்டு தன் கைகளை விரித்து ஐயோ, கொலை பாதகர்களாலே என் ஆத்துமா சோர்ந்து போகிறதே என்றாள்.(எரேமி-4:31) கர்த்தர் சீயோன் குமாரத்தியின் அழுகை கழவி இரத்த பழிகளை அவள் நடுவிலிருந்து நீக்கி அவளை பாதுகாத்தார். மீகா-4:9,10-ல் சொன்னபடியே அவளை சத்துருக்களின் கைக்கு விலக்கி மீட்டார்.

### 4. பொருத்தனையோட கூடிய ஜெபம்...

"உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையை கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன். அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினார். (1-சாமு-1:11) சில வேளைகளிலே உங்களுடைய ஜெபங்களுக்கு சரியான பதில் வராமலிருந்தால் பொருத்தனையோடு ஜெபியுங்கள். கர்த்தருக்கு பூரணமாய் ஒப்புக்கொடுத்து அர்ப்பணித்து ஜெபியுங்கள். பொருத்தனையின் ஜெபத்திற்கு நிச்சயம் பதிலுண்டு. அன்னாளின் பொருத்தயைின் ஜெபத்தை கர்த்தர் கேட்டார். ஆண் குழந்தையை தந்தருளினார். பிள்ளை பால் மறந்தவுடனே கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வந்து விட்டாள். அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியே அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கிறேன். (1-சாமு-1:26) என்று சொல்லி பொருத்தனையை நிறைவேற்றினாள்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து வரும் செப்டம்பர் மாதம் முழுவதும் வழி நடத்துவாராக ஆமென்.

கர்த்தரின் பணியில்,

உங்கள் அன்பு சகோதரி...

# Kids Corner


Once there lived a poor man who helped the poor. He was also a prayerful man. He reads Bible everyday and walked with God. One day a tsunami approached the city that he was living. Everyone was scared because it was raining heavily, and lighting struck also. 100 people rushed to a big school for shelter. The good man was one of them. In front of the school a big tree was there. All the people were struck in the school nowhere to go. the poor man even in this situation prayed to God. God told him "Fear not, for iam with you. climb the tree and keep waving your hands."

Every one else was crying and murmuring and grumbling. But the poor man did exactly what God told him to do. some people said the lightning would strike him if he climbs the tree. But he did not fear. at last after 3 days one helicopter came searching if any people are alive. This poor man waved his hand and the people in the helicopter found him. They came to the school and rescued the poor man and all other people with him. God hears our prayers and saves us. He saves us and also the people with us.

He who is kind to the poor lends to the lord and He will reward him for what he has done. proverb-19:17

By,
Joel Jestine...
VI std




DAVID AND THE GIANT GOLIATH
Part-VII
David took out his slingshot and ran towards Goliath...
I'm going to kill you! HA! HA! HA!
falling down
David hit Goliath with a stone...
David killed Goliath with his own sword...
David had won the battle.
The Philistines ran in fear...
David was crowned King of Israel later on.
David
THE END
Joshua Johnson

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில

















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook – ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only